සියලු ම හිමිකම් ඇවිරිණි. / All Rights Reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

# மூன்றாம் தவணைப் பரீட்சை - தரம் - 08 - 2023 (2024)
# Third Term Test - Grade 08 - 2023 (2024)

## புவியியல்

நேரம்: 2 மணி.

பெயர்:

### பகுதி I

- **பகுதி I இன் எல்லா வினாக்களுக்கும் இவ்வினாப்பத்திரத்திலேயே விடையளிக்குக.**
- **பகுதி II இன் "அ" பகுதிக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.**
- **பகுதி II இல் முதலாம் வினா உட்பட 5 வினாக்களுக்கு விடையளிக்குக. முதலாம் வினா கட்டாயமானது.**

- 01 தொடக்கம் 05 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடைகளை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து இடைவெளியில் எழுதுக.

01. வானவெளியில் காணப்படும் மிகப்பெரிய நட்சத்திரம் .................................... ஆகும்.
(புதன் / சூரியன் / பிலனட் 9 )

02. கோள்களை சுற்றி வருகின்ற விண் பொருட்கள் .................................... என அழைக்கப்படுகின்றன.
(சிறுகோள் / குறுங்கோள் / உபகோள் )

03. ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள கோள்களுள் அதிக வெப்பத்தை கொண்ட கோள் ........................ ஆகும்.
( வெள்ளி / புவி / புதன் )

04. பங்களாதேஷின் சுந்தர்ப்பான் சதுப்பு நிலத்தில் .................................... பிரதான பயிராகும்.
( சணல் / பருத்தி / நெல் )

05. இலங்கையின் 1:50000 இடவிளக்கப்படங்கள் .................................... பிரிவுகளை கொண்டது.
( 94 / 96 / 92 )

- **06 - 10 வரையான கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.**

06. இமய மலைத்தொடரில் ஆரம்பமாகும் கங்கை நதி 2610km வரை விரிவடைந்து வங்காள விரிகுடாவில் கடலுடன் கலக்கின்றது. ( )

07. புவியின் மத்திய கோட்டு விட்டத்தை விட முனைவு விட்டம் அதிகமானது. ( )

08. புறக்கோள்கள் வாயுக்கலவைகளை கொண்டவையாகும். ( )

09. கிராமிய நிலத்தோற்றத்தில் கைத்தொழில் நடவடிக்கைகள் பிரதான பொருளாதார நடவடிக்கையாகும். ( )

10. நில மேற்பரப்பில் காணப்படும் பல்வேறு இலட்சணங்களை இடவிளக்கப்படங்களில் காட்டலாம். ( )

- **11 - 15 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள விடைகளுள் சரியான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

11. காபனீரொட்சைட் வாயுவை பிரதானமாகக் கொண்ட கோள் எது?
i. புதன் ii. வெள்ளி iii. சனி iv. செவ்வாய்

12. தென் அகலக்கோடு 23 1/2$^o$ எவ்வாறு அழைக்கப்படுவது?
i. மத்திய கோடு ii. கடகக்கோடு iii. ஆட்டிக் வட்டம் iv. மகரக் கோடு

13. சூரியன் பற்றிய பிழையான கூற்றை தெரிவு செய்க.
i. சூரியனின் மேற்பரப்பில் சூரிய புயல்கள் ஏற்படுகின்றன.
ii. ஞாயிற்றுத் தொகுதியின் முழுத்திணிவில் 99.86 வீதத்தினை சூரியன் கொண்டிருக்கின்றது.
iii. சூரியனின் சராசரி வெப்பநிலை 60000$^o$c ஆகும்.
iv. சூரியன் தனது அச்சில் சுழல்கின்றது.

14. தெற்காசியாவுக்கு சொந்தமில்லாத தீவு,
i. சீசேல்ஸ் ii. மாலைத்தீவு iii. அந்தமான் iv. நிக்கோபார்

15. கங்கை நதிப்பள்ளதாக்கு தொடர்பாக சரியான கூற்றை தெரிவு செய்க,
i. முக்கிய பொருளாதார நடவடிக்கை மீன்பிடியாகும்.
ii. வளர்ச்சியடையாத பழங்குடி மக்கள் வசிக்கின்றார்கள்
iii. தாழ்நிலப் பிரதேசமாகும்
iv. மேல் நதிப் பள்ளதாக்கிலிருந்து கீழே செல்லும் வரை பல்வேறு பயிர்கள் விளைகின்றன.

- **16 - 20 வரையான வினாக்களுக்குரிய விடையை இடைவெளியில் எழுதுக.**


16. இரவு வானத்தில் செந்நிறப் பொருளாக புலப்படுவது ...................................... கோளாகும்.
17. மேல் வளிமண்டலத்தில் உள்ள ...................................... வளிமண்டலத்தில் இருந்து பூமியை நோக்கி வரும் தீங்கு விளைவிக்கக்கூடிய கதிர் வீச்சின் அளவை கட்டுப்படுத்துகின்றது.
18. இமயமலைத் தொடரில் ...................................... இனத்தைச் சேர்ந்த பழங்குடிப் பிரிவினர் வாழ்கின்றனர்.
19. மாலைத்தீவு முருகைகற்பாரை மற்றும் ...................................... முருகைக்கற்பாரையினாலான 1200 தீவுகளை கொண்டுள்ளது.
20. புவியானது சூரியனை சுற்றி வலம் வருவது ...................................... எனப்படுகின்றது.

(20 x 2 = 40 புள்ளி)

## பகுதி II

- **முதலாம் வினா உட்பட மொத்தம் 5 வினாக்களுக்கு விடை தருக. (முதலாம் வினா கட்டாயமானது)**

01. (அ) பகுதிக்கு விடையளிக்க கீழே உள்ள படத்தை பயன்படுத்துக.





i. தேசப்படத்தில் 20m இடைவெளியிலுள்ள அடுத்த சமவுயரக் கோட்டின் பெறுமதியை எழுதுக.
ii. 160m க்கு மேற்பட்ட மெட்டுநிலப் பகுதியை கபில நிறத்தால் நிறந்தீட்டுக.
iii. படத்தில் காட்டப்பட்டுள்ள வீதியை பொருத்தமான நிறத்தில் நிழற்றிக் காட்டுக.
iv. வீதிக்கும் மலைத்தொடருக்கும் இடையில் மாகாண எல்லையை வரைந்து காட்டுக.
v. வீதி ஓரமாக தென்பகுதியில் புகையிரத வீதியை வரைநது காட்டுக.
vi. படத்தில் பின்வரும் எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ள இடவிளக்கவியல் அம்சங்களை பெயரிடுக.
(a) A - B
(b) C - D
(c) E - F

(8 புள்ளி)

(ஆ) தென்னாசிய வலயத்தை காட்டும் படத்தை பயன்படுத்தி கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

i. A எழுத்தால் காட்டப்பட்டுள்ள மலைத்தொடர்
ii. B எழுத்தால் காட்டப்பட்டுள்ள நதி
iii. C எழுத்தால் காட்டப்பட்டுள்ள தலைநகரம்
iv. D எழுத்தால் காட்டப்பட்டுள்ள பாலைவனம்
v. E எழுத்தால் காட்டப்பட்டுள்ள இந்தியாவிலுள்ள முனை
vi. அரபிக் கடலை காட்டும் ஆங்கில எழுத்து
vii. வங்காள விரிகுடாவை காட்டும் ஆங்கில எழுத்து
vii. இந்து சமுத்திரத்தை காட்டும் ஆங்கில எழுத்து





(8 புள்ளி)


02. i. நட்சத்திரத்திற்கும் கோள்களுக்கும் இடையிலுள்ள வித்தியாசங்கள் இரண்டை எழுதுக. (2 புள்ளி)

ii. கீழே A, B, C, D இனால் காட்டப்பட்டுள்ள வான் பொருட்களை பெயரிடுக. (4 புள்ளி)


A


B


C


D

iii. ஞாயிற்றுத் தொகுதி பற்றிய அறிவை பயன்படுத்தி சரியான விடையை எழுதுக.

(a) சிவப்பு கிரகம் எனப்படுவது
(b) கடுமையான குளிருள்ள கிரகம்
(c) ஞாயிற்றுத் தொகுதியிலுள்ள மிகச்சிறிய கிரகம்
(d) அதிக புவியீர்ப்பு சக்தியுள்ள கிரகம்
(e) வளிகோளம் இல்லாத கிரகம் (5 புள்ளி)

03. i. புவிச்சுழற்சி எனப்படுவது யாது? (2 புள்ளி)

ii. (a) புவியானது அகலக்கோடு $1^{o}$ சுழற்சியடைய எடுக்கும் காலம் எவ்வளவு?

(b) புவிச்சுழற்சியால் ஏற்படக்கூடிய நன்மைகள் இரண்டை எழுதுக. (3 புள்ளி)

iii. சூரியன் உச்சம் தரும் நெடுங்கோட்டில் (நெட்டாங்கு $0^{o}$) நேரம் மு.ப 11.15 எனக்கருதி பின்வரும் நெடுங்கோடுகளில் அமைந்துள்ள நகரங்களின் நேரங்களை கணக்கிடுக.

(a) மேற்கு நெடுங்கோடு $100^{o}$ இல் உள்ள மெக்சிகோ

(b) கிழக்கு நெடுங்கோடு $140^{o}$ இல் உள்ள டோக்கியோ

(c) கிழக்கு நெடுங்கோடு $104^{o}$ இல் உள்ள சிங்கப்பூர் (6 புள்ளி)

04. i. புவி ஒரு சிறப்பான கோள் எனப்படுவதற்கான காரணங்கள் இரண்டை எழுதுக. (2 புள்ளி)

ii. புவியின் சுழற்சி அடிப்படையில் கீழுள்ள அட்டவணையை பூரணப்படுத்துக. (4 புள்ளி)

| திகதி | அழைக்கப்படும் முறை |
|---|---|
| மார்ச் 21 | 1. ...................................................................... |
| 2. ........................................................ | கோடை சூரிய காணநிலை |
| 3. ........................................................ | இலையுதிர் காலம் |
| டிசம்பர் 22 | 4. ........................................................ |

(iii) (a) உலகில் நியம நேரங்களை பயன்படுத்தும் இரண்டு நாடுகளை எழுதுக.

(b) பின்வரும் அகலக் கோடுகள் அழைக்கப்படும் முறையை எழுதுக.

i. $0^{o}$ அகலக்கோடு

ii. 23 $1/2^{o}$ வடஅகலக்கோடு

iii. 66 $1/2^{o}$ தென்அகலக்கோடு (4 புள்ளி)

05. (அ)

i. கீழே A மற்றும் B எழுத்துக்களால் காட்டப்படும் நிலத்தோற்றங்கள் இரண்டையும் பெயரிடுக. (2புள்ளி)



A



B

(ii) (a) A நிலத்தோற்றத்தினை காணக்கூடிய தென்னாசிய பிரதேசத்தினை பெயரிடுக.


(b) அந்நிலத்தோற்றத்தில் காணக்கூடிய இலட்சணங்கள் மூன்றை எழுதுக? (4 புள்ளி)

(iii) B எழுத்தால் காட்டப்பட்டுள்ள நிலத்தோற்றத்தை காணக்கூடிய இந்தியாவிலுள்ள பிரதேசங்கள் இரண்டை எழுதுக.

(b) B நிலத்தோற்றத்தில் காணக்கூடிய பிரச்சினைகள் மூன்றை எழுதுக. (5 புள்ளி)

06. (அ) i. சுற்றுலா நடவடிக்கைகளில் பிரபல்யமான இலங்கையின் கரையோரங்கள் இரண்டை எழுதுக. (5 புள்ளி)

ii. கரையோரப் பகுதியில் காணப்படும் சுற்றுலா கவர்ச்சி மிக்க வலயங்கள் பின்வரும் படத்தில் A,B,C யில் காட்டப்பட்டுள்ளன. அவற்றை ஒழுங்கு முறைப்படி எழுதுக. (4 புள்ளி)




(4 புள்ளி)

iii. (a) கரையோர நிலப்பரப்பில் காணக்கூடிய தனித்துவமான பௌதிக அம்சம் ஒன்றை எழுதுக.

(b) கடற்கரையோர சூழலில் உருவாகியுள்ள சூழல் பிரச்சினைகள் இரண்டை எழுதுக.


(c) கரையோர சூழலை பாதுகாப்பதற்க்காக எடுக்க கூடிய நடவடிக்கைகள் மூன்றை எழுதுக. (5 புள்ளி)

07. i. 1:50,000 இடவிளக்கப்படங்களில் காணக்கூடிய பௌதீக மற்றும் பண்பாட்டு அம்சங்கள் இவ்விரண்டை எழுதுக. (2 புள்ளி)

ii. இலங்கையின் நீள அகலங்களை கீழே காணப்படும் A,B,C,D ஒழுங்குமுறைப்படி எழுதுக. (4 புள்ளி)

iii. (a) சமவுயரக்கோடுகள் என்றால் என்ன?

(b) 1:50,000 அடவிளக்கப்படங்களில் உள்ள சமவுயரக்கோடுகளின் விஷேட பண்புகள் இரண்டை எழுதுக. (5 புள்ளி)




08. ஆசிய பிராந்தியத்தின் நிலப்பரப்புகள் தொடர்பான தகவல்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை பொருத்தமான கூட்டுக்குள் எழுதி பூரணப்படுத்துக.

1. சமவெளிப்பகுதியாகும்.
2. நெல், கோதுமை, கரும்பு ஆகியவை முக்கிய பயிராகும்.
3. குறைந்த வசதிகளுடனான குடியிருப்புகள் அதிகம்
4. வெவ்வேறு உயரங்களில் மலைகள் உள்ளன.
5. குடியிருப்புகள் குளத்தை மையமாகக்கொண்டு உருவாகியுள்ளன.
6. தொடரான நிலத்தைக் காணலாம்.

(6) www.PastPapers.WiKi (5)
Download Term Test Papers, Short Notes From One Place!

7. சனத்தொகை அடர்த்தி குறைவு
8. கிழங்கு வகை நெல், மரக்கறி வேட்டையாடிய விலங்குகள் என்பவற்றை உண்பார்கள்
9. பனிச்சருக்கல் விளையாட்டு மறறும் சுற்றுலா கைத் தொழில் என்பன முக்கியத்துவம் வாய்ந்தவை
10. பிரதேசத்தில் பல நகரங்கள் உருவாகியுள்ளன.
11. மலைகள், சுவடுகள் கணவாய்கள் என்பவற்றை காணலாம்
12. உயிர்ப்பல்வகைமை, தாவரங்கள், ஊர்வன என்பன காணப்படுகின்றன.
13. நீரூற்றுகள் காணப்படும்
14. பிரதான பொருளாதார நடவடிக்கை விவசாயமாகும்.
15. பின்னிய ஆறு, ஆற்று மியாந்தர், சமவெளி என்பவற்றை காணலாம்.

தென் ஆசியாவின் நிலத்தோற்றம்

| கரையோர நிலத்தோற்றம் | மலைப்பாங்கான நிலத்தோற்றம் | கிராமிய நிலத்தோற்றம் |
|---|---|---|
| ........................................... | ........................................... | ........................................... |
| ........................................... | ........................................... | ........................................... |
| ........................................... | ........................................... | ........................................... |
| ........................................... | ........................................... | ........................................... |
| ........................................... | ........................................... | ........................................... |
| ........................................... | ........................................... | ........................................... |

(11 புள்ளி)

(6) WWW.PastPapers.WiKi (6)
Download Term Test Papers, Short Notes From One Place!


LOL.lk
BookStore
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න
| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර
| A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත්
| School Book | ගුරු අත්පොත්
pesuru Prakashana Private Ltd.
Akura Pilot
සමනල දැනුම
සතර
පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට
www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න